# ஹல்துமுல்ல பிரதேச சபை
# பதுளை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 17 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 20 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 யூன் 19 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஹல்துமுல்ல பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) பிரதேச சபைக்குரிய கப் வாகனம் ரூபா 500,000 தொகைக்கு விற்பனை செய்ய முடியும் என எதிர்பார்க்கப்பட்டு அத்தொகை 2010 ஆம் ஆண்டில் கடன்பட்டோர் கணக்கில் வரவு வைக்கப்பட்டு வருமானக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. இந்த கப் வாகனம் 2013 ஏப்ரல் 18 ஆந் திகதி வரையிலும் செயற்பாடற்ற சொத்தாக பௌதீக ரீதியில் காணப்பட்டமையினால் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கடன்பட்டோர் மற்றும் ஆண்டின் வருமானம் என்பன ரூபா 500,000 படி அதிகரித்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 1,381 | 1,549 | 540 |
| (ii) | வாடகை | 834 | 841 | 860 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 554 | 743 | 80 |
| (iv) | ஏனைய வருமானம் | 4,298 | 3,810 | 1,995 |

### 2.2.2 நீதிமன்ற தண்டபணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 696,241 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 1,237,200 |

### 2.2.3 சுற்றாடல் அனுமதிப்பத்திரம்

1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய சபை அதிகாரப்பிரதேசத்தில் அமைந்துள்ள கைத்தொழில்கள், தொழில்முயற்சிகள் தொடர்பாக மெய்மையாய்வின் மூலம் இனங்காண்பதற்கான நடடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

காரணத்தினால் சபையின் நிதிநிலைமை நெருக்கடிக்குள்ளாகி ஆபத்தான நிலையில் இருந்தது.

(ஆ) 2009 முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலத்தில் சபைக்கு கிடைத்த 120 கட்டிட விண்ணப்பப் படிவங்களில் 76 இற்கு நிர்மாணங்களுக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் 02 இற்காக மாத்திரமே இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது. சபை அங்கீகரித்த விண்ணப்பங்களின் நிர்மாணங்கள் தொடர்பாக பின்தொடர் சடவடிக்கைகள் எடுத்து சபைக்கு அறவிடக்கூடிய ஆதனவரியை அறவிடுவது தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் அலக்க கடிதத்தின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் சபையின் கொள்வனவுச் செயற்பாடுகள் தொடர்பான கொள்வனவு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கொள்வனவுக் கால அட்டவணை என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) ஒப்பந்த நிருவாகம்